## கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்

# மருங்கூர் பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!




குமரி, ஜூலை 29-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், மருங்கூர் பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 27.07.2026, திங்கட்கிழமை அன்று மாலை 6.30 மணிக்கு அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன் தலைமையில் அமராவதி விளை பகுதியில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை யாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என். தில்லைசெல்வம், முன்னாள் பேரூர் செயலாளர் சுபி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஜென்சன் ரோச், பேரூராட்சி உறுப்பினர் மரிய புஷ்பம், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கவிதன், போஸ்கோ, சதா கிங்ஸ்டன், கழக நிர்வாகிகள் அலெக்ஸாண்டர், செல்வ கிங்ஸ்டன், விஜய லெட்சுமி, துரை உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

மருங்கூர் பேரூராட்சிக் குட்பட்ட தோப்பூர் பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பள்ளி சென்று வர அமராவதிவிளை பகுதியில் இருந்து தோப்பூர் பகுதி வரை காலை 9.00 மணி மற்றும் மாலை 5.00 மணி ஆகிய இருவேளைகளிலும் பேருந்து வசதி வேண்டியும், 30B சர்வீசில் இராமனாதிச்சன்புதூர் பகுதிக்கு இரண்டு பேருந்துகள் இயங்கி வந்த நிலையில் தற்போது ஒரு பேருந்து மட்டுமே இயங்கி வருகிறது. எனவே, நிறுத்தப்பட்ட 30B பேருந்து இயக்கத்தை மீண்டும் துவக்கிட வேண்டி நாகர்கோவில் அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இராமனாதிச்சன்புதூர் ஆத்தங்கரை சாலை மிக மோசமடைந்து காணப் பட்ட நிலையில் புதிதாக தார் சாலை அமைப்பதற்கு ஒப்பந்த பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மூன்று மாதங்களுக்கு மேலான பிறகும் சாலை பணிகள் தொடங்காமல் உள்ளது. மேலும், பேரூராட்சி பகுதியில் அம்ரூத் குடிநீர் திட்ட பணிகளும் நீண்ட காலமாக முடியாமல் உள்ளது. ஆகவே, மேற்குறிப்பிட்ட பணிகளை உடனே செய்திட வேண்டி கன்னியாகுமரி மாவட்ட பேரூராட்சி உதவி இயக்குநரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளபெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

## மருத்துவக் கல்வியில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டின் மூலம் இதுவரை

# 26,204 பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உரிமை உறுதி செய்யப்பட்ட நன்னாள் இன்று (29.7.2026)

**2021** ஜூலை 29 இந்தியாவின் சமூகநீதி வரலாற்றில் மறக்கமுடியாத மகத்தான நாள்.

மருத்துவக் கல்வியில் இதர பிற்படுயத்தப்பட்ட மாணவர்களின் 27 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்த நன்னாள்.

சமூகநீதிக் கொள்கையில் உறுதி,

அசராத உழைப்பின் அடையாளம்

நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தந்த வழிகாட்டலில் உச்சநீதிமன்றத்தின் மூலம் வென்று வந்த நாள்.

கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் உரிமைகளில் எல்லோருக்கும் எல்லாம் என சமூகநீதிக்கான வரலாற்றை தொடங்கி வைத்தவர்கள் நம் முன்னோடிகள்.

நீதிகட்சியாக உருவாகி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என கடந்த நூற்றாண்டு காலத்தில் ஒடுக்கப்பட்ட தமிழ் சமுதாயத்தை படிப்படியாக முன்னேற்றியது சமூகநீதி அரசியல்.

சமூக நீதிப் போராட்டத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்றினார் தந்தை பெரியார்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் சமூகநீதியை சட்ட வடிவங்களில் உறுதி செய்தார்கள்.

அணையாத திராவிடப் பெருஞ்சுடரை, கலைஞருக்குப் பின் தன் கைகளில் ஏந்தி "எல்லோருக்கும் எல்லாம்" என இந்தியாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறார் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

'கல்வியே நம் தலைமுறையை மாற்றும் ஆயுதம்' என பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் கொண்டிருந்த உறுதியோடு, நம் கழகத் தலைவர் அவர்களும் தமிழ்நாட்டு மாணவர் நலனில் காட்டும் அக்கறைகள் ஏராளம்.



மூத்த வழக்கறிஞர்
பி.வில்சன் எம்.பி.

மருத்துவ உயர்கல்வியில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதியை அறிந்து, அதற்கெதிரான சட்டப் போராட்டத்துக்கு 'நீ சென்று வென்று வா' என்று மூத்த வழக்கறிஞராகிய என்னிடம் ஆலோசனை வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் , அவர் காட்டிய உறுதியிலேயே நாடாளுமன்றம் வழி, உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் வழி போராட்டத்தை நடத்தினோம்.

இந்தியாவுக்கே வெளிச்சம் கிடைக்கும் வகையில், அகில இந்திய மருத்துவ மாணவர் சேர்க்கையில், இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 27% இட ஒதுக்கீட்டை உச்சநீதி மன்றம் வழி உறுதி செய்தோம்.

2019 ஆம் ஆண்டில், மாநிலங்களவை உறுப்பினராக எனக்கு மாபெரும் வாய்ப்பை அளித்தார் கழகத்தலைவர் அவர்கள். ஜனநாயகக் கடமையாற்றும் முதல் உரையிலேயே, மருத்துவப் படிப்புக்கான அனைத்திந்திய தொகுப்பு இடங்களில் ஓ.பி.சி. இட ஒதுக்கீடு கோரிக்கையை வலியுறுத்தினேன்.

எந்தக் கோரிக்கை, யார் மூலம், எங்கு ஒலிக்க வேண்டும் என்பதை அறிவார் நம் தலைவர்.

2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தொடங்கிய நம் போராட்டம், 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் தேதி, உச்சநீதிமன்றத் தீர்ப்பின் வழி உறுதி செய்யப்பட்டது.

"நாடு முழுவதும் உள்ள அனைத்திந்திய தொகுப்பில் உள்ள மாநில அரசுகளுக்கு உட்பட்ட அனைத்து இளநிலை, முதுநிலை, பட்டய, பல் மருத்துவப் படிப்புகளில் O.B.C. வகுப்பினருக்கு 27 சதவித இட ஒதுக்கீடு தர ஒப்புக்கொண்டு அரசாணை வெளியிட்டது ஒன்றிய அரசு.

இதன் மூலம் 2021 முதல் 2026 வரை ஐந்து கல்வி யாண்டுகளில் சுமார் 26,204 பிற்படுத்தப்பட்ட , இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உரிமை உறுதி செய்யப் பட்டுள்ளது.

மாண்புமிகு ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் அளித்த தரவுகளின் படி அதாவது MBBS படிப்பில் 9816 மாணவர்கள், BDS படிப்பில் 649 மாணவர்கள், PG (MD/MS) படிப்புகளில் 15,739 மாணவர்கள் பயன் பெற்றுள்ளார்கள் என்று தெளிவாகிறது.

அந்த வகையில், இதுவரை இந்த வழக்கின் மூலமாக நாம் பெற்றிருக்கக்கூடிய 26,204 மருத்துவக் கல்வி இடங்களானது 175 மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டதற்கு ஒப்பானது.

ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கும் பல்லாயிரக்கணக்கான இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவர்களின் மருத்துவக் கனவு நனவாக்கப்படுகிறது என்பதை இந்த தரவுகள் பறைசாற்றுகிறது.

வரலாற்றின் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய அந்த சாதனைப் போராட்டத்தை நிகழ்த்திக் காட்டியவர் நம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தனது உறுதி மிக்க செயல்பாடுகளால் இன்று இந்தியாவுக்கே வழிகாட்டும் தலைவராக, வரலாற்றை தெற்கிலிருந்து எழுதிக் கொண்டிருக்கிறார் நம் தலைவர்.

இந்தியாவில் ஒட்டுமொத்த ஓ.பி.சி. மாணவர்களின் கல்வி உரிமையை நிலைநாட்டிய இந்த நாள், நம் கழகத் தலைவர் அவர்களின் வெற்றித் திருநாளாக கொண்டாடப்பட வேண்டும்.

என்றும்,கழகத் தலைவரின் வழியில் சாதனை பயணத்தை தொடர்வோம்!

## சோளிங்கர் – த.வெ.க எம்.எல்.ஏ. தலைமையில் 20 பேர் கொண்ட கும்பல்

# பத்திரிகையாளர்களை அறையில் அடைத்து வைத்து கொலைவெறி தாக்குதல்!

## நடவடிக்கை எடுக்கக் கோரி உறவினர்கள் – பொதுமக்கள் சாலை மறியல்!

வேலூர், ஜூலை, 29-

இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் தினகரன், தினமலர் நிருபர்களை அறையில் அடைத்து வைத்து கொலைவெறி தாக்குதல் நடத்திய சோளிங்கர் எம்.எல்.ஏ. தலைமையில் 20க்கும் மேற்பட்ட கும்பல் மீது நடவடிக்கை எடுக்க கோரி உறவினர்கள், பொது மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் ஒரு தியேட்டரில் சில நாட்களுக்கு முன்பு ஜனநாயகன் திரைப்படம் வெளியானது. இந்த திரைப் படத்தை சோளிங்கர் எம்எல்ஏ கபில் தியேட்டரில் பார்த்துவிட்டு வெளியே வந்துள்ளார். அப்போது யூடியூபர் சிவா என்பவர் அங்கே இருந்துள்ளார். உடனே த.வெ.க. எம்.எல்.ஏ. கபில் அந்த யூ.டியூபரை தாக்க முயன்றுள்ளார் அது தொடர்பான வீடியோ சமூக வலைத் தளங்களில் வைரலானது. மேலும் இது குறித்த செய்தி டி.வி.களில் ஒளிபரப்பானது.

இதனால் எம்.எல்.ஏ. கபில் மற்றும் அவரது ஆதரவாளர்கள் ஆத்திரமடைந்து அந்த யூ டியூபர் சிவாவை தேடி வந்துள்ளனர். தொடர்ந்து படத்தை தியேட்டருக்கு சென்று சி.சி.டி.வி. கேமரா பதிவுகளை ஆய்வு செய்துள்ளனர். அப்போது நிருபர்கள் யூடியூபர் மற்றும் யார் யார் வந்தார்கள் என்பது குறித்து ஆய்வு செய்துள்ளார்.

இந்நிலையில் சோளிங்கர் அண்ணா சிலை அருகே உள்ள யூ டியூபரின் வீட்டிற்கு எம்.எல்.ஏ. கபில் மற்றும் அவரது தம்பி தனஞ்செழியன் மற்றும் 20க்கும் மேற்பட்டவர்கள் அங்கு சென்றுள்ளனர். அப்போது அவர் குளித்து கொண்டு இருந்துள்ளார் குளித்து முடித்தவுடன் வெளியே வந்த சிவாவை வலுக்கட்டாயமாக அருகில் உள்ள யூடியூபரின் ஸ்டுடியோ கடைக்கு அழைத்துச் சென்று சரமாரியாக தாக்கி உள்ளனர்.

இதற்கு இடையே சம்பவம் குறித்து அறிந்த அப்பகுதி பொதுமக்கள் கடையின் வெளியே குவிந்தனர். கடையின் வெளியே நடந்த சம்பவங்களை நிருபர்கள் ரங்கநாதன், கல்யாணசுந்தரம் ஆகியோர் செல்போனில் வீடியோ பதிவு செய்து கொண்டிருந்தனர்.

இதைப் பார்த்த கபில், அவர் தம்பி தனஞ்செழியன் மற்றும் 20க்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள் ஆவேசத்துடன் அரங்கநாதன் மற்றும் கல்யாணசுந்தரம் இருவரையும் சுற்றி வளைத்து பிடித்து அந்த கடையில் உள்ளே தள்ளி கதவை மூடி உள்ளே வைத்து சரமாரியாக தாக்கி உள்ளனர். மேலும் செல்போன்களை பறித்துக் கொண்டு பதிவு செய்த வீடியோக்களை அழிக்குமாறு கூறியுள்ளனர்.

இவர்களின் சத்தம் கேட்டதும் அங்கிருந்த பொது மக்கள் கடையின் முன்பு குவிந்து கூச்சலிட்டனர். தகவல் அறிந்த சோளிங்கர், போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தனர் காவல் அதிகாரி எம்.எல்.ஏ. கபில் போன் செய்து வரவழைத்தார். அப்போது நிருபர்கள் அரங்கநாதன் தினமலர் நிருபர் கல்யாணசுந்தரம் ஆகியோர் பதிவு செய்த வீடியோக்களை எஸ்.ஐ. முன்னிலையில் எம்.எல்.ஏ. கபில் அவரது தம்பி தனஞ்செழியன் ஆகியோர் அழித்துள்ளனர். தொடர்ந்து அவர்களை த.வெ.க.வின் எம்.எல்.ஏ. மற்றும் அக்கட்சியினர் அந்த நிருபர்களை கடுமையாக தாக்கிவிட்டு காரில் தப்பி சென்றனர். தாக்குதலில் பலத்த காயடைந்த அரங்கநாதன், கல்யாணசுந்தரம், சிவா ஆகிய மூன்று பேரையும் அங்கிருந்த பொதுமக்கள் மீட்டு சோளிங்கர் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கு அவர்களுக்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்கு வேலூர்தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

இதற்கு இடையில் இந்த தாக்குதல் சம்பவத்தை நேரில் பார்த்து அதிர்ச்சி அடைந்த உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது தாக்கு நடத்திவிட்டு தப்பி ஓடிய எம்.எல்.ஏ. மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்ய வேண்டும் என்று கூறி போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மேலும் தாக்குதலில் காயம்அடைந்த இந்த மூன்று பேரும் சோளிங்கர் போலீசில் தனித்தனியாக புகார் மனு அளித்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் அ. மகாதேவன்

### ஜூலை 29 (2013)



சிவகங்கை மாவட்டத்தில் கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது பணியாற்றியவர். ஒன்றுபட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் சென்று கழகத்தினை வளர்த்தவர்.

ஒன்றியச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

"பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த இவர், அந்தகாலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தீவிரமாக பணியாற்றியவர்" என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்..

தலைமைக் கழகம்
தி.மு.க.

# மேகதாது அணை கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும்!

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 29-

தென் சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன், விதி 377ன் கீழ் கர்நாடக அரசின் மேகதாது அணைத் திட்டத்தை உடனடியாக நிறுத்த மத்திய அரசு தலையிட வேண்டும் என்றும், காவிரி நீர் பங்கீட்டு விவகாரத்தைத் தீர்ப்பதற்காக தனி தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்றும் மக்களவையில் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் பேசியதாவது:-

கர்நாடகா மற்றும் தமிழ்நாடு இடையேயான நீண்டகால மாநிலங்களுக்கு இடையேயான நீர்விவகாரமாக மேகதாது அணைத் திட்டம் இருந்து வருகிறது. காவிரி மற்றும் அர்காவதி ஆறுகள் சங்கமிக்கும் பகுதியில் ரூ.9,000 கோடி மதிப்பில் கர்நாடக அரசு



மேகதாது அணைத் திட்டத்தை முன்னெடுத்து வருவது மிகவும் வருத்தமளிப்பதுடன், தமிழ்நாட்டின் நலனுக்கு எதிரானதாகும்.

காவிரியின் கீழ்படுகை மாநிலமான தமிழ்நாடு, இந்தத் திட்டத்தை தீவிரமாக எதிர்த்து வருகிறது. இந்த அணை கட்டப்பட்டால், கீழ்நோக்கி செல்லும் நீரின் அளவு கடுமையாகக் குறைவதுடன், காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும் என்ற அச்சம் நிலவுகிறது.

மேகதாது அணைத் திட்டம், 2007ஆம் ஆண்டு தீர்ப்பாயத்தின் இறுதி உத்தரவையும், 2018ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் மீறுவதாகும். காவிரி நீர்ப் பிடிப்பு பகுதியிலுள்ள அனைத்து மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமல் புதிய கட்டமைப்புகளை உருவாக்க முடியாது என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

மேகதாது திட்டத்திற்கு சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கக் கூடாது என்று வலியுறுத்தி தமிழ்நாடு சட்டப்பேரவை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளதையும் அவர் நினைவூட்டினார்.

மேலும், தி.மு.க. சார்பில் மேகதாது விவகாரத்தைத் தீர்க்க தனி தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்ற திருத்தத் தீர்மானமும் முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், முன்னாள் முதலமைச்சர் தலைமையிலான தி.மு.க. தொடர்ந்து இந்தத் திட்டத்தை எதிர்த்து வருவதாக தெரிவித்தார்.

எனவே, கர்நாடகாவின் மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கையை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமும், காவிரி நீர் மேலாண்மை ஆணையமும் நிராகரித்து திருப்பி அனுப்ப வேண்டும் என்றும், தமிழ்நாட்டுக்குரிய காவிரி நீரை உரிய அளவில் உறுதி செய்யவும், மேகதாது அணை தொடர்பான அனைத்து கட்டுமானப் பணிகளையும் கர்நாடக அரசு உடனடியாக நிறுத்த மத்திய அரசு உத்தரவிட வேண்டும் என்றும் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தினார்.




கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத் தலைவர், கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் தலைமையில் நேற்று முன்தினம் (27.07.2026) திங்கள் கிழமை நடைபெற்றது.இதில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத் துணைத் தலைவர், விழுப்புரம் பாராளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.இ.பத்மஜா, கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சி.அருள் விக்னேஷ் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கி.ரமேஷ்குமார் உள்ளிட்ட பலர் உடன் உள்ளார்கள்.